உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௨.] 1919௵ செப்டம்பர்மீ [பகுதி ௯,

## தசபுராணம்.

"நீலநன்மேனி செங்கண்வளை வெள்ளெயிற்ற னெரிகேச னேடிவருநாட்
காலைநன் மாலைகொண்டு வழிபாடுசெய்யு மளவின்கண் வந்துகுறுகிப்
பாலனை யோடவோட்டப் பயமெய்து வித்தவுயிர் வவ்வுபாசம் விடுமக்
காலனை வீடுசெய்த கழல்போலு மண்டர்தொழு தோதுசூடு கழலே"

(இ-ள்) நீலநன்மேனி=நீலநிறந்தங்கிய நல்லதேகத்தையும், செங்கண்=சிவந்த கண்ணிணையும், வளைவெள்ளெயிற்று=வளைவாகிய வெண்மைநிறந்தங்கிய பற்களையும் உடைய, எரிகேசன்=சிவந்த தலைமயிரையுடைய யமன், நேடிவருநாள்=தன்னைத் தேடிவருங் காலமறிந்து, காலை=காலைப்போதும், நல்மாலை=நல்ல மாலைப்போதினும், வழிபாடுகொண்டு=வழிபடுதலை முறையாகக்கொண்டு, செய்யும் அளவின்கண்=செய்து வருகின்ற காலத்தே, வந்துகுறுகி=வந்து அடைந்து, பாலனை=அவ்வாறு முறையாகப் பூசித்துவரும் மார்க்கண்டேயனை, ஓடஓட=ஓடோடியும் ஓட, பயம் எய்துவித்த=பயத்தினை யடையச்செய்த, உயிர்வவ்வும்=எவ்வுயிரினையும் கொள்ளைகொள்ளும். பாசம்=பாசக்கயிற்றினை, விடும்=வீசும், அ காலனை=அந்த யமனை, வீடுசெய்த=விடுவித்த, கழல்போலும்=திருவடிபோலும் அண்டர்=தேவர்கள், தொழுது=வணங்கி, ஓதும்=துதிக்கின்ற, சூடும்=தலைகளிற் சூடிக்கொள்ளும், கழல்=திருவடி. ஏ—அசை.

ஒவ்வொருவர் ஆயுட்காலமுடிவிலும் அவர்காலமறிந்து அவரது உயிர் கொண்டு போதற்கே 'காலன்' எனப் பெயரிட்டு, இறைவன் தென்றிசையின்கண் யமனைத் தலைவனாக இருத்தினனாயினும், ஞானமயமாக நின்று இறைவன் திருவடியைப் பற்றாகக்கொண்டு, காலையும் மாலையும் முறையாக சிவபெருமானைப் பூசித்து வருகின்ற தருணத்துப் பாசம் வீசுவது தகுதியின்மையென நிறுவிப்பான் பொருட்டே, இறைவன், தமது திருவடியால் யமனை யுதைத்து எத்தித் துதித்த பாலனை காத்தனர் என்பது போதர, 'காலைநன் மாலைகொண்டு வழிபாடுசெய்யு மாவின்கண் வந்துகுறுகிப் பாலனை யோடவோடப் பயமெய்து வித்தவுயிர் வவ்வுபாசம் விடுமக், காலனை வீடுசெய்த கழல்' என்றனர்.

இனிப் புராண வரலாறாவது :—

மிருகண்டு முனிவர் என்பார் தமக்குப் புத்திரப்பேறின்மையால் இறைவனை நோக்கிப் பலநாள் தவஞ்செய்தலும் அவர் தவத்திற்கு இரங்கிய பெருமான் அவர் முன் எழுந்தருளி வேண்டியவரத்தை வினவுதலும், தவங்கிடந்த மிருகண்டு முனிவர் தமக்கு ஒரு புத்திரன் வேண்டுமென்று இரத்தலும். இறைவன் "எல்லாக் கலைகளும் ஓதியுணரும் பதினாறுவயதளவுமுள்ள ஓர் புத்திரன் வேண்டுமோ? அல்லது எழுத்து ஒன்று மறியாது இடர்ப்படும் நூறுவயதளவும் உள்ள புத்திரன் வேண்டுமோ? என்று வினவுதலும், மிருகண்டு முனிவர் 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பேறல்ல பிற' என்றபடி அறிவறிந்த பிள்ளையொன்றே வேண்டும்" என்று திருவடி தொழுதலும் அவ்வாறே பதினாறுவயதுடைய பிள்ளையொன்று தோன்றும்படி இறைவன்வரந்தந்து, திருவுருக்கரந்தருளினர். அவ்விதமே மிருகண்டுமுனிவர் மனைவியிடத்தே ஓர் கருத்தோன்றி நன்னாளில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு மார்க்கண்டேயன் எனப்பெயரிட்டு வளர்த்து வருநாளில் வளர்பிறைச்சந்திரன்போன்று வளரும் அக்குழந்தை 'ஒருமைக்கண் தான்கற்ற கல்வியொருவற் கெழுமையும் ஏமாப்புடைத்து' என்றபடி முற்பிறவிகளில் ஓதியுணர்ந்த பலனால் இப்பிறவியில் எல்லாக்கலைகளையும் எளிதிற் கற்று ஒழுக்கமே யுருவெனக் கொண்டு கற்றதனாலாய பயனை அடைவான்பொருட்டு வாலறிவனாய இறைவன் திருவடியை முப்பொழுதும் பூசித்துத் துதித்து வருவதாய் இருந்தது. பிறகு பதினாறு வயது அடையும்பருவத்தே இறைவன் அருளிய வரத்தினை யுணர்ந்த மிருகண்டு முனிவரும் அவர் பத்தினியும் வருந்திநிற்க அதனை அவர்கள் வாயாலறிந்த மார்க்கண்டேயர் 'எதுவரினும் இறைவன்

திருவடியே தஞ்சம்' என்று எண்ணினராய் 'கூற்றங்குதித்தலுங் கைகூடும் நோற்றலின் ஆற்றறலைப்பட்டவர்க்கு' என்றபடி திருக்கடவூரையடைந்து தீர்த்தத்தில் மூழ்கித் திருக்கோயிலினுட்சென்று சிவபெருமானைக் காலையும் மாலையும் பூசித்து வந்தித்து வழிபடுங்காலையில் பதினாறு வயது முடிகின்ற அக்கடைநாளில் யமன் தனது படரோடு மார்க்கண்டேயரை யடைந்து அணுகி அவர் சிவபூஜை செய்துக்கொண்டிருத்தலையுங் கருதாது அவர் மீது பாசத்தை யெறிதலும், சிவபெருமான் அச்சிவலிங்கத்தினிடமாகத் தோன்றி பாசக்கயிற்றோடு நிற்கும் யமனைத் தமது திருவடிகளால் உதைத்து, சிவலிங்கத்தைத்தழுவி தஞ்சமென்றிருந்த மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறு வயதாகவே யிருக்க வரந்தந்தனர் என்பதாகும்.

பத்திராதிபர்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மூப்பொருள் ஆராய்ச்சி.

தொகுதி-8-பகுதி-8-பக்கம்-189-தொடர்ச்சி.

எண்ணிறந்த கோடியான்மாக்களுக்குஞ் சிவனொருவராயிருந்து அறிவிக்கிறதெப்படியென்னில் எண்ணிறந்த கோடி கண்களுக்கு மார்த்தாண்டன் ஒருவனாயிருந்து காட்டுதல்போலும். (௯௧)

எண்ணிறந்த கோடி யான்மாக்களையு மலமொன்றாயிருந்து மறைக்கிறதெப்படியெனில் எண்ணிறந்த கோடி கண்களையு மிருள் ஒன்றாயிருந்து மறைத்தல்போலும். (௯௨)

எண்ணிறந்தகோடி யான்மாக்களுக்கு மெண்ணிறந்த கோடி கன்மங்களைச் சிவன் ஒருவராயிருந்து அறிந்து கூட்டிமுடிக்கிறதெப்படியென்னில் ஒரு வண்ணான் ஒரு ஊரிலே யிருக்கிற பலபேர்களுடைய பல புடவைகளையும் வாங்கி வெளுத்து அவரவர்கள் புடைவையை யவரவர்க்கு அறிந்தெ

டுத்துக் கொடுத்தல்போலாம். ஒரு இடையன் பலபேருடைய பசுமாட்டையும் மேய்த்து அவரவர் வீட்டிலே யறிந்து கொண்டுபோய் விடுதல்போலும், வினைவேறே-கன்மம் வேறே. (௩௩)

வினையாவது அநாதியிலே யாணவமலத்தினாலே யான்மாவுக்குக் கன்மத்திலே யுண்டாகிய விருப்பம்.

கன்மமாவது புண்ணிய பாவங்கள். இதற்கு வசனம். தேவாரம்.

“அல்ல லென்செயு மருவினை யென்செயுந்
தொல்லை வல்வினைத் தொண்டன்று னென்செயும்” என்றது (௩௪)

கன்மமாவது தூலகன்மமென்றும், சூக்கும கன்மமென்றும், அதிசூக்கும கன்மமென்றும், மூன்றுவிதமாம். தூலகன்மம் ஆகாமியம்.

ஆகாமியமாவது ஆன்மா பிராரத்தம் புசிக்கையிலே எழாநின்றவிதாகிதங்கள். இதாகிதங்களாவன வாக்குக் காயங்களினாலே, செய்யப்பட்ட நல்லதொழிலுந் தீயதொழிலுமாம். சூக்கும கன்மமாவது சஞ்சிதம். சஞ்சிதமாவது மாயையிலே கட்டுக்கிடையாய புண்ணிய பாவங்கள். அதிசூக்கும கன்மமாவது பிராரத்தம். பிராரத்தமாவது எடுத்த தேகத்திலே புசித்துத் தொலைவதாகிய சுகதுக்கங்கள். சுகதுக்கங்களுக்கு இருப்பிடமாவன சத்தபரிச ரூபரசகந்தமாகிய விஷயங்கள்- இவ்வைந்து விஷயமும் விருப்புச்சத்தம் வெறுப்புச்சத்தம் விருப்புப் பரிசம் வெறுப்புப்பரிசம் விருப்புரூபம் வெறுப்புரூபம் விருப்புரசம் வெறுப்புரசம் விருப்புகந்தம் வெறுப்புக்கந்தம் என்று பத்துவிதமாயிருக்கும். (௩௫)

ஆன்மாவினுடைய பிராரத்த கன்மத்தைச் சிவனுமறிவார். ஆன்மாவு மறிவன். இரண்டுஞ் சரியோவென்றால் சிவனறிகிறது மாத்திரம். ஆன்மா அறிந்தழுந்துவன். (௩௬)

ஆன்மா பிராரத்தம் புசித்தற்குச் சிவன் நல்வினை தீவினை யிரண்டையுங் கருவியாகக்கூட்டினார். சிவன் கூட்டின தொழிலை தன்னுடைய தொழிலாக நினைத்துக்கொண்டானதலால் அந்த இரண்டு தொழிலு மான்மாவுக்கா காமியமாயின. (௩௭)

கன்மமானது சாதி ஆயுசு போகமென மூன்றுவிதமாயிருக்கும். இந்த மூன்றும் நல்ல சாதி தீய சாதி யெனவும் தீர்க்காயுசு அற்பாயுசு எனவும் வெகு போக மற்பபோகமெனவு மாறுவகைப்படும். (௩௮)

ஆன்மாவுக்கு முன்னாற் சித்தகன்மம் பின்னும் பின்னாற் சித்தகன்ம முன்னுமாக மாறிவரும். அதெப்படி ஒருவன் பனைவிதையை முன்னே நட்டு பின்னால் தென்னம்பிள்ளையை வைத்தான். அதன் பின்னே கதலி நட்டான். அதன் பின்னே கீரை விதைத்தான். அவனுக்குக் கீரை பதினைந்து நாளையிலே பலனாய் வரும். கதலி ஒரு மாதத்தில் பலனாய்வரும். தென்னை ஐந்துவருஷத்தில் பலனாய் வரும். பனை முப்பது வருஷத்தில் பலனாய் வரும். அதுபோல கன்மமும் மென்மை வன்மைக்கீடாக பாகப்பட்டு மாறிப் பலனாய் வரும். இதற்கு வசனம். சிவப்பிரகாசர் "தொடங்கடை வீனடையாதே தோன்றுமாறி" என்றது. (௩௯)

ஆன்மாவுக்குப் பிராரத்தகன்மம் வருமிடத்து தைவிகம், பௌதிகம், ஆன்மிகமென்று மூன்று விதமாய் வரும். அவற்றுள் தைவிகமாவது சநந மரணம், நரை திரை முதலாயின கர்த்தாவினால் வருவது. பௌதிகமாவது மின், இடி மழை, காற்று, தீ. நீர் முதலியவற்றால் வருவது. ஆன்மிகமாவது ஆன்மாக்களால் வருவது. அப்படி வரும் பிராரத்தம் தானிச்சைபட்டும் வருகிறதுண்டு தானிச்சைப்படாமல் வருகிறதுமுண்டு. தானிச்சித்தபடி வராமல் வேறாய் வருகிறதுமுண்டு. (௪௰)

மாயாகாரியத்திலே போகமென்று சொன்னது லக்ஷணைப்பொருள், கன்ம லக்ஷணத்திலே போகமென்றது சுபாவமாகிய துக்கசுகம். (௪௧)

ஆன்மாக்களுக்குக் கன்மம் ஆர்ச்சிப்புக் கேவலாவத்தையிலே யல்லாமற் சகலாவத்தையிலே கூடாது. சகலாவத்தையிலே யார்ச்சிப்பானும் சிவன் பேரில் தேடிவரும். ஆகையினால் சகலாவத்தையிலே ஆன்மாக்களுக்கு ஆர்ச்சிப்பு இல்லை. (௪௨)

ஆணவமலமானது இராக்காலம் போலும் கேவலம் இருள்போலும் கேவலத்திற்குப் பொருள் மறைப்பு. (௪௩)

ஆன்மாவிற்குக் கேவல சகல சுத்தமென மூன்றவத்தையுண்டு. அவற்றுட் கேவலமாவது காரண கேவலமென்றும் காரியகேவலமென்று மிருவகைப்பம். அவற்றுட் காரணகேவலமாவது அனாதிதொடுத்து மோட்ச பரியந்தம் ஆன்மா வறிவுகெடாமல் ஆணவமலத்திலே யழுந்திக்கிடத்தல். அதெப்படியென்னில் கண்ணானது இராக்காலத்து, இருளிலே ஒளிகெடாமல் விழித்திருத்தல் போலும்.

காரியகேவலமாவது அறிகருவிகள் நீங்கிச் சாக்கிர முதலஞ்சவத்தைப்படுதல். காரண சகலமாவது அநாதி சிருட்டி தொடுத்து மோட்ச பரியந்தமுள்ள எண்ணிறந்த சிருட்டி காலங்களிலே யுண்டாகிய மாயா சரீரங்களைப் பற்றி முப்பத்தாறு தத்துவங்களையும் பொருந்தி நின்று கன்மங்களை யறிதல். அதெப்படியென்னில் இராக்காலத்திருளிலே யழுந்திக் கிடந்த கண்ணானது விளக்கினாலே யிருள் நீங்கிப் பதார்த்தங்களைக் கண்டாற்போலும். காரியசகலமாவது இலாடத்தானத்திலே தானே துரியாதீத முதல் சாக்கிர மீறாகவுள்ள மத்தியாலவத்தை யைந்தையு மடைதல். காரணசுத்தமாவது ஆன்மா பஞ்ச மலங்களையு நீங்கி யருளைப் பொருந்தி சிவானந்தத்தை யனுபவித்தல். இராக்காலத்திலே யிருளோடும் விளக்கோடும் கூடியிருந்த கண்ணானது ஆதித்த னுதயஞ்செய்த விடத்து இராக்காலத்தை இருளையும் விளக்கையும் விட்டு நீங்கி ஆதித்த கிரணத்தினாலே யாதித்தனைக் காண்டல்போலும். காரிய சுத்தமாவது நின்மல சாக்கிர முதலிரண்டவத்தையுமாம். (௩௩)

மலநிவர்த்திக்குக் காரணமாவன — அநாதிசிருட்டிதொடுத்து மோட்ச பரியந்தம் ஆன்மாவாலுண்டாகிய சிவபுண்ணியங்களாம். சிவபுண்ணியங்களாவன அபுத்தி பூருவ சிவபுண்ணியம், புத்திபூருவ சிவபுண்ணியம், உபாய சரியை, உபாய கிரியை, உபாயயோகம், உபாயஞானம், உண்மைச் சரியை, உண்மைக்கிரியை, உண்மைஞானம் என்று பத்துவிதமாயிருக்கும். இந்தப் பத்தில் முந்தின ஒன்பது மலநிலை பின்சொன்ன உண்மை ஞானமென்னும் சிவபுண்ணிய மொன்று மருணிலை. அந்த உண்மை ஞானமொன்றும் தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்று பத்துவிதமாயிருக்கும். இந்தப் பத்தையுஞ் சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மல சாக்கிரமுதலைந்தவத்தையிலடங்கி யாசாரியர் பக்குவனானச் சீஷனுக்குத் திருவான திட்சையைப் பண்ணி யறிவிப்பர். இந்தப் பத்தையு நின்மல சாக்கிரமுதல் ஐந்தவத்தையிலடக்க அடங்கு முறைமையாவது தத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவ சுத்தி ஆன்மரூபமாகிய நான்கும் நின்மல சாக்கிரத்திலடங்கும். ஆன்ம தரிசனமும் சிவரூபமும் நின்மல சொப்பனத்திலடங்கும். நின்மல சுத்தியில் தசகாரியத்தி லடங்குவ தொன்றுமில்லை. ஆன்மா அருள்செய்யும் பஞ்சகிருத்தியத்தை யான் செய்வேனென்று கருதுதல் மாத்திரம் ஆன்ம

சுத்தியும் சிவதரிசனமும் சிவயோகமும் நின்மலத் துரியத்திலடங்கும். சிவபோகமொன்றும் நின்மல துரியாதீதத்தி லடங்கும். (௬௬)

தத்துவ ரூபமாவது முப்பத்தாறு தத்துவங்களுடைய தொழிலை யறிதல்.

தத்துவ தரிசனமாவது முப்பத்தாறு தத்துவங்களையுஞ் சடமென் றறிதல்.

தத்துவ சுத்தியாவது முப்பத்தாறு தத்துவங்களையு மன்னியமென் றறிந்து நீங்குதல்.

ஆன்ம ரூபமாவது பஞ்சமலங்களையு நீங்கி யான்மாவை பிரம மென்று கருதல்.

ஆன்ம தரிசனமாவது தனக்கொரு செய்தியு மில்லையென்றறிந்து நீத்தல்.

ஆன்மசுத்தியாவது ஆன்மா சிவஞானத்திலே போயழுந்தித் தானெனுமம லந்தச் சிவஞானமாய்ப் போதல்.

சிவரூபமாவது ஆணவமலத்திலே கிடக்கிறஆன்மாவை சிவன் பஞ்ச கிருத்தியங்களைச்செய்து மலங்களை நீக்கி மோக்ஷத்தில் விடுவரென்று திடமாயறிதல்.

சிவதரிசனமாவது சிவஞானச் செய்தியும் பஞ்சகிருத்தியத்தைத யான்மா செய்யமாட்டானென் றறிந்து திருவருளொடு அழுந்தாது சேர்தல்.

சிவயோகமாவது சிவசத்தி செய்யுங் கிருத்தியங்களெல்லாம் சிவனுக்குச் சற்றுமில்லை யென்றறிந்து சிவசத்தியை யன்றித் தனக்கும் பிறருக்கும் சற்றுஞ் செய்தியில்லையென்று தெரிந்து திருவருளொடு அழுந்தியதுவாய்ப் போதல்.

சிவபோகமாவது ஆன்மா சிவானந்தத்தைப் புசித்தல். (௬௫)

சிவஞானபோதத்தில் இரண்டாஞ் சூத்திரத்தில் தத்துவரூபமென் றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

ஐந்தாஞ் —— தத்துவ தரிசனம்.

ஆறாஞ்சூத்திரத்து தத்துவசுத்தியும் ஏழாஞ்சூத்திரத்தில் ஆன்ம ரூபமும் எட்டாஞ்சூத்திரத்தில் ஆன்மதரிசனமும் சிவரூபமும் ஒன்பதாஞ்சூத்திரத்திலும் பத்தாஞ்சூத்திரத்திலும் ஆன்ம சுத்தியும் சிவதரிசனமும் சிவயோகமும், பதினோராஞ்சூத்திரத்தில் சிவபோகமும் சொல்லியிருக்கிறது. (௪௬)

சிவஞானபோதமுதல் சூத்திரத்தில் சங்கார கர்த்தாவை முதன்மையான கர்த்தாவென்று சொன்னது. இரண்டாஞ்சூத்திரத்திலே மலமும் கன்மமும் மாயையு மான்மாவுஞ் சிவனுமாகிய வைந்துபொருளு மத்துவிதமாயிருக்குமென்றது. மூன்றாஞ்சூத்திரத்தில் அனுமானத்தினாலே ஆன்மாவுண்டென்று சாதித்தது. நாலாஞ்சூத்திரத்திலே ஆன்மாவுக் கனாதியிலே கேவல சகல சுத்தமென்று மூன்று அவத்தையுண்டென்று சொன்னது. ஐந்தாஞ் சூத்திரத்திலே ஆன்மா தன்னைப் பிரமமென்று கருத அல்லவென்று மறுத்தது. ஆறாஞ்சூத்திரத்து சத்தும் அசத்தும் பகுத்துச்சொன்னது. ஏழாஞ்சூத்திரத்தில் ஆன்மவிலக்கணமும் முன்சொன்ன சத்தசத்திற்கும் புறநடையுஞ் சொன்னது. எட்டாஞ்சூத்திரத்தில் சிவஞானத்தை யறியுமுறைமை சொன்னது. ஒன்பதாஞ்சூத்திரத்தில் ஆன்ம சுத்தி சொன்னது. பத்தாஞ்சூத்திரத்துப் பாச க்ஷயஞ் சொன்னது. பதினோராஞ்சூத்திரத்தில் ஸ்ரீ பரமேசுரன் திருவடியை யடையுமுறைமை சொன்னது. பன்னிரண்டாஞ்சூத்திரத்தில் மனோ வாக்குக் காயங்களினாலே யறியப்படாத கர்த்தாவை மன வாக்குக் காயங்களாலறிந்து வழிபடு முறைமையைச் சொன்னது. (௪௭)

ஞானவானுக்குப்பிரார்த்தமில்லையென்பதற்கு உவமைகள் வருமாறு. ஒருவனோரூரிலே மணியம்பண்ணிக் கொண்டிருந்து வேண்டிய நெற்களும் வாழை கரும்பு முதலிய புன் பயிர்களுமுண்டாக்கிக் கொண்டிருக்கிற நாளையில் மணியம்மாறிப் புதுமணியக்காரன் வந்தவிடத்து பழைய மணியக்காரனாலே யொரு பதார்த்தமும் எடுக்கப்படமாட்டாது. பழைய மணியக்காரனைப்போலு மான்மா. ஊரைப்போலுஞ் சரீரம். பதார்த்தங்களைப்போலும் பிரார்த்தம். புதுமணியக்காரனைப்போலுஞ் சிவன். (௪௮)

(இன்னும் வரும்)

93

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவாரூர் நான்மணிமாலை யுரை.

தொகுதி - 8 - பகுதி 8 - பக்கம் - 177 - தொடர்ச்சி

## நேரிசை வெண்பா.

"கண்ணனார் பொய்ச்சூள் கடைப்பிடித்தோ தென்புலத்தா
ரண்ணலா ரஞ்சுவரென் றஞ்சியோ—விண்ணோர்
விருந்தாடு மாரூரா மென்மலர்த் தாடூக்கா
திருந்தாடு கின்றவா வென்"

(இ-ள்) விண்ணோர்=தேவர்கள், விருந்து=விருந்தாகக் கொள்ளும்படி ஆடும்=நடனத்தைச் செய்கின்ற, ஆரூரா=திருவாரூரனே! மெல் மலர்த்தாள்=மிருதுவாகிய மலரைப்போலுந் திருவடிகளை, தூக்காது=தூக்கியாடாது, இருந்து=இருந்தவண்ணமாகவிருந்து, ஆடுகின்றவா=நடனத்தைச் செய்யும் விதம், கண்ணனார்=தாமரைக்கண்ணராகிய விஷ்ணுமூர்த்தியினது, பொய்ச்சூள்-பொய்யாகிய சபதத்தை, கடைப்பிடித்தோ-திருவுளத்தில் எண்ணியோ, தென்புலத்தார் அண்ணலார்=தென் திசைத் தலைவனாகிய யமன், அவஞ்சுவன்=பயப்படுவன், என்று அஞ்சியோ=என்று பயந்தோ, என்=யாது காரணம். எ-று.

## கட்டளைக் கலித்துறை

என்னுயிர்க் கொக்கு மிளஞ்சேயோ டேழுலகின்ற வன்னை
மன்னுயிர்க் கொக்குங் கமலைப்பிரான் மணிக்கண்டங் கண்டு
மின்னுயிர்க்கும் புயலென்று மென்கொன்றை பைந்தாதுதிர்க்கப்
பொன்னுயிர்க் கொண்கன்பொ லன்றுகி லாமெக்தை பூந்துகிலே.

(இ-ள்) என் உயிர்க்கு=எனது இனிமையாகிய வுயிர்க்கு, ஒக்கும்=எக்காலத்தும் ஒத்திருக்கும், இளம்சேயொடு=முருகப்பிரானொடு, எழ்

உலகு = ஏழுலகங்களையும், ஈன்ற = ஆன்மாக்கள் உய்யும்வண்ணம் பெறுது பெற்ற, அன்னை = உமாதேவியாரது, மன் உயிர்க்கு = அருளாகிய வுயிர்க்கு, ஒக்கும் = எக்காலத்தும் ஒத்து இருக்கும், கமலைப்பிரான் = திருவாரூரி லெழுந்தருளிய தியாகராயப்பெருமான், மணிகண்டம்கண்டு - நீலமணியின் நிறம்வாய்ந்த காளகண்டத்தைக் கண்டு, மின் உயிர்க்கும் = மின்னலைச் செய்யும், புயல் என்று = மேகம் என்று, மெல்கொன்றை = அப்பெருமா னது திருமுடியிலுள்ள கொன்றை மாலையானது, பை தாது உயிர்க்க = பசிய மகரந்தங்களைச் சிந்த, எந்தை = என் தந்தையாகிய தியாகராயப் பெருமானது, பூதுகில் = பூப்போன்ற யானைத்தோலாகிய வஸ்திரமானது, பொன் = இலக்குமியினது, உயிர்க்கொண்கன் = நாயகராகிய விட்டுணு மூர்த்தியது, பொலன் துகில் = பொன்னுடைபோல், ஆம் = ஆகும்.

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பூமாதி னிதயகம லத்துவைகும் பொலிவானு
மரியணைமேற் புணரியீன்ற
மாமாது வழிபடவீற் றிருத்தலானு மறைமுதலு
நடுமுதலு முடிவினின்ற
தாமாத றெளிவிப்பார் போலுநீலத் தரங்கநெடுங்
கடன்ஞால மொருங்குவாய்த்த
கோமாது மனங்குழையக் குழைந்தவாரூர்க் குழகனார்க்
கிண்கிணிக்கா லழகனாரே.

(இ-ள்) நீலத்தரங்க நெடுங்கடல் = நீலநிறந் தங்கிய அலைகளோடு கூடிய நீண்ட கடலால் சூழப்பட்ட, ஞாலம் = உலகினை, ஒருங்குவாய்த்த = இச்சை மாத்திரத்துப் படைத்த, கோமாது = உமாதேவியாரது, மனம் குழைய = மனமானது வருக, குழைந்த = முலைத்தழும்பும் வளைத்தழும் பும் பொருந்தக் குழைந்த, ஆரூர் குழகனார் = திருவாரூரில் எழுந்தருளிய தியாகராயப் பெருமான், கிண்கிணிக்கால் அழகனார் = கிண்கிணி என்னும் திருவாபரணத்தை யணிந்த திருக்கால்களையுடைய அழகப்பிரானார், பூமா தின் = வெண்கமலாசனத்தியாகிய சரஸ்வதியின், இதய கமலத்து = மனத் தாமரைக்கண், வைகும் பொலிவானும் - எழுந்தருளிப்பிரமனையதிட்டித்துப் படைத்தற்றொழிலை யியற்றுவித்தலானும், அரியணைமேல் = சேஷசயனத் தின்மீது, புணரியீன்ற மாமாது = பாற்கடலில் அவதரித்த திருமகள், வழிபட = வணங்க, வீற்றிருத்தலானும் = எழுந்தருளியிருந்து விண்டுவை

யதிட்டித்துக் காத்தற்றொழிலை யியற்றுவித்தலானும், மறைமுதலும் = பிரமதேனும், நடுமுதலும் = விஷ்ணுமூர்த்தியும், முடிவினின்றமுதலும் = சங்காரத்தொழில் செய்யும் உருத்திரமூர்த்தியும், தாமாதல்தெளிவிப்பார் போலும் = தாமேயன்றி பிறரின்றுதலைத் தெரிவித்து நிற்பார் போலும்.

முதல் என்பதை முடிவினின்ற எனும் எச்சத்துடனுங் கூட்டிப் பொருள் கொள்க.

சிருட்டி, திதி சம்மாரம, திரோபவம், அனுக்கிரகம் ஆகிய பஞ்ச கிருத்தியங்களைச் சிவபெருமானே செய்கின்றனர். மற்றைத் தேவர்கள் ஏவலால் அமைந்து நடப்போர் என்பது கூறியதாகும். இதனை,

"உரைத்தவித் தொழில்கண்மூன்று மூவருக் குலகமோத
வரைத்தொரு வனுக்கேயாக்கி வைத்ததிங் கென்னையென்னில்
விரைக்கமலத் தோன்மாலு மேவலான் மேவினோர்கள்
புரைத்திகா ரசத்தி புண்ணிய னண்ணலாலே"

என்னுந் திருவிருத்தத்தா லுணர்க.

நேரிசை ஆசிரியப்பா

அழலவிர் சோதி முழுவெயி லெறிப்ப
விளநில வெறிக்குங் குளிர்மதிக் குழவியும்
வெஞ்சினம் பொதிந்த நஞ்சுமிழ் பகுவாய்
வெள்ளமுள் ளெயிற்றுப் பிள்ளைவாளர்வுந்
தெண்டிரை கொழிக்குந் தீம்புனற் கங்கைத்
தண்டுறை மருங்கிற் றனிவிளை யாட
வுடன்வைத் தாற்றிய படர்சடைக் கடவு
ளெறும்வலித் தறுகட் டெறுசினக் கேழன்
முளையெயி றிலங்க முருகு கொப்பளித்துத்
தளைய விழிதழித் தண்டார் மார்ப
திருவிழி யிரண்டினு மிருசுடர் வழங்கலி
னிரவு நன்பகலு மொருபுடைக் கிடந்தெனக்
கடங்கலுழ் கரடத் தடங்களிற் றுரிவையு
மடங்கலீ ருரியு முடன்கிடந்த லமர
விண்படர் நிவந்த திண்புயாசல
வெட்டிலைக் கமுகி னெடுங்கயி றூர்த்துக்
கட்டுபொன் னூசல் கன்னிய ராடவப்

பைங்குலைக் கமுகு பழுக்காய் சிந்த
வெண்கதிர் நித்திலம் வெடித்துகு தோற்றங்
கந்தரத் தழகு கவர்ந்தன விவையென
வந்தி லாங்கவ ரார்த்தன ரலைப்ப
வொண்மிட றுடைந்தாங் குதிரஞ் சிந்தக்
கண்முத் துகுத்துக்க லுழ்வது கடுக்குந்
தண்டலை யுடுத்த வொண்டமிழ்க் கமலைப்
பொற்பதி புரக்கு மற்புதக் கூத்தநின்
சேவடிக் கொன் றிது செப்புவன் கேண்மதி
விலங்கினுண் மிக்கது விண்ணவர் தருவென
வொருங்கு வைத்தெண்ணுவ தோர்வழக் கன்மையி
னொத்த சாதியி னுயர்பு மற்றிழிபும்
வைத்தன ரல்லதை வகுத்தனர் யாரோ
யாருயிர்க் கமைந்த ஓரெழு பிறப்பினுண்
முற்படு தேவருண் முதல்வனென் றெடுத்துக்
கற்பனை கடந்த கடவுணிற் பழிச்சுதுந்
தொன்மறைக் குலங்கண் முன்னியதி யாதெனப்
பன்முறை தெரிப்பினும் பயன்கொள வரிதாற்
தேவரி னொருவனென் றியாவரு மருளுற
நீயே நின்னிலை நிகழாது மறைத்துக்
கூறியதாகு மாகலிற்
றேறினர் மறையெனச் செப்பினர் நன்கே.

(இ-ள்) அழலவிர்சோதி = அழலோடுவிளங்கும் சோதித் திருமேனியானது, முழுவெயில் எறிப்ப = முழுவதும் வெயிலினை எறிக்கவும், இளநிலவு எரிக்கும் = இளமையாகிய சந்திரிகையை வீசும், குளிர்மதிக்குழவியும் = குளிர்ந்த பிறைச்சந்திரனையும், வெம்சினம் பொதிந்து = மிகுந்த கோபத்துடன், நஞ்சுவுமிழு = விடத்தைக் கக்கும், பகுவாய் = பிளந்த வாயுமுள்ள, வெள்ளை முள் எயிறு = வெண்மையாகிய முள்போலும் பற்களையுடைய, பிள்ளைவாள் அரவும் = ஒளிதங்கிய இளமையாகிய பாம்பினையும், தெள்திரை கொழிக்கும் = தெளிந்த அலைகளை வீசும், தீம்புனல் கங்கை = கங்காதேவியினது, தண்துறை மருங்கில் = குளிர்ந்த துறையாகிய விடத்தே; தனிவிளையாட = பயமற்று விளையாட, உடன்வைத்து = (சந்திரனையும் பாம்பினையும்) ஒன்றாக வைத்து, ஆற்றிய = தாங்கிய, படர் சடைக்

கடவுள்=படர்ந்த சடாபாரத்தினையுடைய கடவுளே, எறும் வலி=எழுநிலைப்போலும் வலியினையுடைய, தறுகண்=அஞ்சாமை மிக்க, தெறுசினக் கேழல்=மிகுந்த கோபத்தினையுடைய பன்றியினது, முளை எயிறு, இலங்க=முளைபோலும் வெண்மையாகிய பற்களானவை விளங்க, முருகு கொப்பளித்து=தேனினைக்கக்கி, தளையவிழ்=முறுக்கானது அவிழும் இதழித் தண்தார்=குளிர்ந்த கொன்றை மாலையினையும் உடைய, மார்ப=திருமார்பினையுடையானே, திருவிழி இரண்டினும்=இரண்டு திருவிழிகளிலும், இருசுடர்=சூரிய சந்திரர்கள், வழங்கலின்=இருத்தலால், இரவும் நன்பகலும்=இரவும் பகலும், ஒருபுடைகிடந்தன=ஓரிடத்தே யிருந்ததென்று சொல்லும்படி, கடம்கலுழ்=மதஜலத்தைஊற்றும், கரடத்தடங் களிற்று=வேறுபாடாகிய முகத்தினையுடைய யானையினது, உரிவையும்=தோலையும், மடங்கல்=நரசிங்கமாகிய சிங்கத்தினது, ஈர்உரிவு=உரித்த வெண்மையாகிய தோலும், உடன்கிடந்து அலமர=ஒன்ருக இருந்து வேறு பாட்டினைச் செய்ய, விண்படசிவந்த=ஆகாயவரையில் உயர்ந்த, திண்புயாசல=வலிமைதங்கிய மலைகளைப்போலும புயங்களையுடையானே, நெட்டிலைக் கமுகின்=நீண்ட இலைகளையுடைய கமுகில், நெடும் கயிறு ஆர்த்து=நீண்டதோர் கயிறினுற்கட்டிய, பொன்ஊசல்=அழகிய்ஊசலிலே, கன்னியர் ஆட=பெண்கள் ஆடவும், அ=அந்த, பைங்குலை=பசிய குலைகளையுடைய, கமுகு=பாக்கு மரமானது, பழுக்காய் சிந்த=பழுத்த காய்களைச்சிந்தவும், வெண்கதிர் நித்திலம்=வெண்மையாகிய கிரணங்களை வீசும் முத்துகளானவை, வெடித்து உகு தோற்றம்=வெடித்துச் சிந்துகின்ற பார்வையானது, இவை=இப்பாக்கு மரங்கள், கந்தரத்தழகு கவர்ந்தன என=நம்முடைய கழுத்தின் அழகினை அபகரித்துக் கொண்டன என்று, அந்திலாங்கு அவர் ஆர்த்தனர் அலைப்ப=அப்பாக்கு மரங்களைக் கட்டி வருத்தவும், உள்மிடறு உடைந்து=உள்தங்கிய கழுத்தானது உடைந்து, ஆங்கு உதிரம் சிந்தீ=அவ்விடத்தே இரத்தத்தைச் சிந்தவும், கண்=கண்களானவை, முத்து உகுத்து=முத்துப்போன்ற சலத்தை யுகுத்து, கலுழ்வது கடுக்கும்=அழுவதை யொத்திருக்கும், தண்டலையுடுத்த=சோலைகள் சூழ்ந்த, வொண்தமிழ்க்கமலை=சிறந்த தமிழ் விளங்கும் திருவாரூராகிய, பொற்பதி=அழகிய தலத்தினை, புரக்கும்=அருளால் காக்கும், அற்புதக்கூத்த=ஆச்சரியமுடைய திருக்கூத்தினையுடையானே நின் சேவடிக்கீழ்=தேவரீரது திருவடியில், ஒன்று இது=இதுவொன்று, செப்புவன்=விண்ணப்பஞ் செய்வன், கேள்=தேவரீர் அதனைத் திருச்செவி

யேற்றல்வேண்டும், விலங்கினுள் மிக்கது=விலங்குகளில் மேலாயது, விண்ணவர் தருவென=தேவதருவென்று, ஒருங்குவைத்து எண்ணுவது=ஒன்றுகவைத்து எண்ணுவது, ஓர் வழக்கு அன்மையின்=உலக வழக்கில் ஒன்ருக இல்லாமையால், ஒத்தசாதியின் உயர்வும்=ஒரே இனத்தினது உயர்வும், இழிவம்=தாழ்வும். வைத்தனர் அல்லது=வைத்தார்களல்லாமல், வகுத்தனர் யாரே=யாவரே பிரித்தவர், ஆர் உயிர்க்கு அமைத்த=அருமையாகிய வுயிர்களுக்கு அமைக்கப்பெற்ற, ஓர் எழு பிறப்பினுள்=எழ் பிறவிகளுள், முற்படு தேவருள்=மேலாகிய பிறவிகளுள் எண்ணும் தேவர்களுள்ளே, கற்பனைகடந்த கடவுள்=பாவனைக்கு அடங்காத கடவுளாகிய, நின்=தேவரீரை, முதல்வன் என்று=ஆதி என்று, எடுத்துப் பழிச்சுதும்=எடுத்துத் தோத்தரிப்பேன், தொல்மறைக் குலங்கள்=பழமையாகிய நான்கு வேதங்கள், முன்னியது=எண்ணியிருப்பது, யாதென=எது வென்று, பல்முறை தெறிப்பினும்=பல முறைகள் ஆராய்ந்து பார்ப்பினும், பயன்கொள=உண்மைப் பயனை யிதுவென்று அறிய, அரிதால்=அருமையாக விருப்பதால், தேவரில் ஒருவன் என்று=தேவருள் ஒருவனென்று, யாவரும் மருள் உற=எவரும் மயங்க, நீயே=தேவரீரே, நின் நிலை=தேவரீரது பெருந்தகுதியானது, நிகழாது=விளங்க வொட்டாமல், மறைத்துக் கூறியதாகும், ஆகலில்=அவ்வாறு செய்ததால், தெறினர்=மெய்யுணர்வுடையோர், நன்கே=மிக நன்மை படவே, மறையென=மறைக்கப்பட்டுள்ளது என்னும் பெயருடனே, செப்பினர்=கூறினர்.

சிவபெருமான் தேவரில் ஒருவர் என்று எண்ணும் மெய்யுணர்விலாதார் கூற்றினை மறுப்பதற்கு இத்திருச்செய்யுள் எழுந்ததாகும்.

இதனை,

"தேவரி லொருவனென்பர் திருவுருச்சிவனைத் தேவர்
மூவராய் நின்றதோரார் முதலுருப்பாதி மாத
ராவது முணரரராதி யரியயற் கறியவொண்ணு
மேவரு நிலையுமோரா ரதனுருவிளைவு மோரார்"

என்னும் திருவிருத்தத்தா லுணர்க.

பத்திராதிபர்.

96



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவ சமயாசாரியர்களாகிய

# நால்வர் ஆனந்தக் களிப்பு.

## திருஞானசம்பந்த சுவாமிகள் ஆனந்தக் களிப்பு.

சிவசிவ சங்கர் சம்பு—என்னும்
திருஞானசம்பந்த சுவாமியை நம்பு—சிவ

கவலை யெல்லா மின்று தீரும்—நெஞ்சே
கலங்காதே வாழ்வெல்லா நம்மையே சேரும்—சிவ.

சீகாழிப் பதியிலிருக்கும்—நிலத்
தேவரிற் பிறவிப் பிணியைப் பெருக்கும்
மோகா டவியைக் கருக்கும்—ஞான
முத்திய கவுணிய ருள்ளமு முருக்கும்—சிவ. (க)

சிவபாத விருதய ரென்னும்—ஐயர்
தேவி பகவதி யாரிவ ருன்னும்
தவமே யுருவாகித் துன்னும்—இந்தச்
சகத்தினில் வந்தன்பர் தம்முள்ளே மன்னும்—சிவ. (உ)

அன்னை தந்தையினோ டெல்லாரும்—வாழ்த்த
அருமையாகிய பிள்ளையா ரெனும்பேரும்
மன்னியெத் தேசத்தி னோரும்—சைவ
மார்க்கத்தி னுண்மையை யறிந்திடத் தேறும்—சிவ. (ங)

ஆண்டொரு மூன்றது சேர—தீர்த்தத்
தத்த னுடனே சென்றன்பது சேர

மூண்டழு தேதுயர் தீரத்—தோணி
முதல்வனார் விடையேறி யுமையோடு சாரச்—சிவ. (௪)

பரவி யிறைஞ்சிடக் கண்டு—சிவன்
பார்வதிக்குச் சொல்ல வேயருள்கொண்டு
தருஞானப் பாலினை யுண்டு—கேட்குந்
தந்தைக் கிவர்கள் தந்தாரெனப் பண்டு—சிவ.

கையை யுயரவெடுத்துச்—சுட்டிக்
காட்டித் தோடுடையசெவன் றேதமிழ் தொடுத்துப்
பைய வுரைத்தன் படுத்துப்—போற்றிப்
பார்தனிலே கலி வாராமல் தடுத்துச்—சிவ. (௬)

சேர்ஞான சம்பந்த ரென்றும்—யாருஞ்
செப்பும் ஆளுடைய பிள்ளையா ரென்றும்
பேர்பெற் றுலகெலா மின்றும்—போற்றப்
பிறையணி சடையுடை யெம்மானே யின்றும்—சிவ.

கோலக்காவிற் கையாற் றாளம்—போட்டுக்
கொண்டு பதிகங்கள் பாடத் தயாளம்
சாலப் பரமன் பொற்றாளம்—தரச்
சத்திபின் போசை கொடுக்கக் கங்காள—சிவ. (௮)

தந்தையார் தந்தோளிற் றூங்கிக்—கொண்டு
சாரத் தலங்களிற் சென்றன்பி னோங்கி
முந்து துயரங்கள் நீங்கி—விட்
முதல்வரைப் பாடி யருள்தர வாங்கிச்—சிவ. (௯)

திருவறத் துறையினின் முத்துக்—குடை
திகழ்முத்துச் சிவிகைமுத் துச்சின்ன முத்து
பெருகு மெக்காளமு முத்து—புனை
பெரிய தாரையு மத்தரருளக் களித்துச்—சிவ. (

எச்சொன்று மில்லாத சோழ—ராசன்
ஈன்ற மகளுக்கு நோயொன்று மூளப்
பாச்சிலாச் சிரமத்துக் காள—கண்டப்
பரமனைப் பாடித்துதித் தந்நோய் மாளச்—சிவ. (௧௧)

பட்டீச்சரத்தினி லுற்ற—சிவன்
பரிவுடன் முத்துப் பந்தர்தரப் பெற்ற
தட்டாத வன்பினின் மற்றச்—சிவ
தலமெங்கும் போய்த்துதி செய்தருள் முற்றச்—சிவ. (கஉ)

ஆவடு துறையினிற் சென்று—எந்தை
அருமகஞ் செய்யப் பொருள்தாரு மென்று
ஓவில் பதிகம் புகன்று—தொழு
துலவாக்கிழி யருளுர்தர நின்று—சிவ. (கங)

அந்தப்பொன் முடிச்சிமை யீன்ற—தந்தைக்
களித்தும் மொடுங்காழி வாழ்பவ ரான்ற
சிந்தைக்குளே மகிழ்தோன்ற—யாகஞ்
செய்யலா மென்றன்பு தம்முளே யூன்றச்—சிவ. (கச)

பாம்பொரு செட்டியைக் கடித்து—விஷம்
பரவியிறக்க வரும்பெண் துடித்துத்
தேம்பிடப் பரன்புகழ் வடித்துப்—பாடிச்
செத்தவன் பிழைத்திட வன்பு தடித்துச்—சிவ. (கரு)

அவ்விருவருக்கும் பரிந்து—மணம்
அந்த மருகலிற் சாட்சியுந் தெரிந்து
செவ்வையுடனே புரிந்து—தேவ
தேவனைப் போற்றி யன்புள்ளே விரிந்து—சிவ. (கசு)

திருவீழி மிழலையில் விருப்பு—மேவிச்
சிவனைப் பணிந்தங் கிருக்கக் கருப்பு
மருவவக் கோயி லிருப்பு—கொள்ளும்
மகதேவன் பொற்காசு தரவெள்ளிப் பொருப்பு—சிவ. (கஎ)

பொற்காசுக்குப் பண்டங் கொண்டே—அமுது
போற்றிப் படைக்க வடியார் திரண்டே
அற்பாக வந்தமர்ந் துண்டே—களித்
தானந்த மெய்தி யிருப்பது கண்டே—சிவ. (கஅ)

அந்தக் காசுவட்ட மின்றி—மாற
அருமையுடனே பதிக முண்ணன்றி

மூன்றுநப்பாடியே வென்றி—கொண்ட
மூவிலைச் சூலத்தர் பாலன்பு துன்றிச்—சிவ. (கக)

திருமறைக் காட்டினிற் சேர்ந்து—அப்பர்
திறப்பித்த கதவினைச் சாத்திட நேர்ந்து
மருவிய பதிகமுன் நேர்ந்து—பாடி
வாழ்த்திப் பணிந்தெழுந்தே யன்புகூர்ந்து—சிவ. (உ0)

மதுரையிலே சமண்மூடி—யிருத்தல்
மங்கையர்க் கரசியார் தெரிவிக்க நாடி
இதமாகச் சென்றங்குக் கூடிச்—சமணர்
இட்டதீ பாண்டியற்காகவே பாடிச்—சிவ. (உக)

பாண்டியன் மேனி கொதிக்கச்—சுரம்
பற்றுதல் நீங்கிடப் பாடிக் களிக்க
ஈண்டு மடமையை யழிக்க—நள்ளாற்
றீசன்பதிகம் அழலிலே வைக்கச்—சிவ. (உஉ)

ஆற்றினி லேடுவிடுத்துக்—கழுவில்
அமணர்க ளேறிட வுள்ளங் கடுத்து
நீற்றினை யாருமெடுத்துப்—போற்றி
நெற்றியிற் பூசிக்கொள வன்படுத்துச்சி—வ. (உங)

துதிசெய் தவ்விடத்திருந்து—சோம
சுந்தரன் பாதமன்போடு பணிந்து
பதிகங்கள் பாடித் திரிந்து—மெங்கள்
பாண்டிமா தேவிதனையே புகழ்ந்து—சிவ, (உச)

திருக்கொள்ளம் பூதூரி லாற்றி—லோடம்
செல்லப் பதிகமுள் ளன்புடன் சாற்றி
இருக்கு மடியாரை யேற்றிக்—கரை
எய்திப்பரன் சந்நிதிதன்னிற் போற்றி—சிவ. (உரு)

தெளிச்சேரிக் கெய்திடும்போது—புத்தன்
சினந்து தடுக்க வவன்தலை மீது
சுனிச்சிடி தானுந் தப்பாது—விழத்
தொழுதன்பொடு துதிசெய்தல் விடாது—சிவ. (உசா)

ஆண்பனை பெண்பனையாகக்—குரும்பை
யாண்பனை யென்னும் பதிகம் வன்மோக
மாண்பற வோதியே சோகம்—விட
வாய்ப்புள வன்பர்க் கருள்சிவ லோக—சிவ. (உஎ)

திருமயி லையினில் வெந்திட்ட—அங்கந்
திரண்டுயிர்ப் பூம்பாவை யாகவே யிட்ட
மருவிப் பதிக மட்டிட்ட—என்ன
வாய்மையா லோதி யருள்வந்து கிட்ட—சிவ. (உஅ)

இவ்வண்ணந் தலமெங்கும் பரவிப்—பணிந்
திசைப்பதிகங்க ளிசைத்தன்பு மருவிச்
செவ்வைகொள் மணத்துள மிருவிப்—பின்னும்
சிவனே பொருளென வெண்ணித் தன்பொருவி—சிவ, (உகூ)

கல்லூர்ப் பெருமண மென்னச்—சொல்லும்
நற்பதி தன்னிலே யாவருந் துன்னக்
கல்லூர்ப் பெருமண மென்ன—ஓதும்
கடவுட் பதிக முரைசெய்து மன்னச்—சிவ. கூய

சிவனடி யாரெலாம் வாழப்—போற்றும்
திருநெறித் தமிழ்வேத மென்நாளும் வாழப்
புவனியுள் ளோரெல்லாம் வாழத்—தொழும்
பூதிசாதன மெங்கும் போற்றியே வாழச்—சிவ.

இன்னும் வரும்.

---

இது

காஞ்சிபுரம் - வித்துவான்.

சபாபதி முதலியார் இயற்றியது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பதிபசுபாச விளக்கம்.

தொகுதி - 8 - பகுதி 7 - பக்கம் - 177 - தொடர்ச்சி

## பசுவியல்பு.

ஈசன் றன்மைக ளொருசில கூறின னினிமேல்
பாசமேவிய பசுவியல் பகருவன் பசுக்கள்
ஈசன் போலவே நித்தமாய் வியாபக மாகித்
தேசுசார்ந்திடு பளிங்கினி லதுவதாய்த் திகழும்.

இருளினுல் மறைக்கப் படுமிச்சையு மெய்து
கிரியையும் மிறுஞானமு முடையதாய்க் கேடில்
பொருளதா யிருணீங்கிய போதர னருளுக்
குரியதாய்ச் சதசத்தென வுள்ளதா லுயிரே.

## பசுமூவியல்பு.

அந்த மன்னுயிர் ஆணவம் ஆணவங்கன்மம்
முந்துமாணவங் கன்மமு மாயையு மென்னும்
பந்தவேறு பாட்டா லொருமுத்திறப் படுமால்
வந்தநாடமும் முத்திற மாகியே வழங்கும்.

## விஞ்ஞானகலர்.

போற்றிடு சதாசிவர் புடையிற் சூழ்ந்தவர்
சாற்றிடு மேவல்செய் யெண்மர் தங்கிடு
மேற்றமார் மகேசனைச் சூழு மெண்மரும்
ஆற்ற விஞ்ஞானமார் கலர்க ளாவரே.

சோற்றிடு யோகினல் நவல்சர் யாசத்தால்
ஏற்றிடு தீக்கையால் மாயை சன்மமும்
தோற்றிட வட்டுநற் சுத்த மாயையில்
ஏற்றிடு போகமுள்ள வரு மன்னரே.

பிரளயாகலர்.

மேவிய பிரளயா கலர் விளம்பிடில்
ஆவிக ளருள்சிவ வடிவ மானவர்
தாவிலாச் சதபதி னெட்டு ருத்திரர்
மூவரி லுயர்ந்தவ ராக முன்னுவர்.

சகலர்.

கண்ணனும் பிரமனுங் காயத் தாயிரங்
கண்ணனும் முதற்பல கடவுண் மக்களும்
எண்ணுறு சகலரென் றியம்பப் பட்டுளர்
நண்ணுறு பிறவிசேர் நாமு மன்னரே.

மூவித மாயையின் முளைத்த முப்பது
மேவிய வாறெனு விளம்பு தத்துவம்
தாவிய யாக்கையை யெடுத்துத் தாரணி
ஓவிலாச் சுவர்க்க முற்று லவ ரென்பரே.

நல்வினை தீவினை நயந்து செய்தவை
எல்லையி லனுபவ மெங்கு மீய்ந்திடச்
சொல்லிய நாலெழு வகையிற் ரோற்றமுற்
றல்லலை யடைந்தடைந் தலைவ ரென்பரே.

துய்யநல் வினையினாற் சுவர்க்க மேறியும்
வெய்ய தீவினையினால் நரக மேவியும்
பையவே கறங்கெனப் போய்ப் பயன்நுகர்ந்
தையகோ விவர்படு மவலமார் சொல்வார்.

இவ்வனம் பிறந்திறந் திளக்கு நாளிலே
திங்களஞ் சடையனு ரருட் டிறத்தினல்
பொங்கிய நல்வினைப் புணர்ப்பு வாய்த்திட
சங்கையில் விவேகமுந் தலைப்படும் மரோ.

---

(இன்னும் வரும்.)

க. வேலுப்பிள்ளை,

யாழ்ப்பாணம்.

## மதிப்புரை.

---

சைவபோதம்.

யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகின்றவன் அச்சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கமில்லாதபொழுது அச்சமயத்தாலாகிய பயனைப்பெருன். அதன்றியும் அச்சமயத்துக்கு உரிய கடவுள் இவரென்பதும், அவரது இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும் விலக்கப்பட்ட பாவங்களும் அந்தப் புண்ணிய பாவங்களின் பலங்களாகிய சுகதுக்கங்களும், அவரை வழிபடும் முறையும், அவ்வழிபாட்டினுலே பெறப்படும் பயனும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாத பொழுது, அவ்வொழுக்கம் உண்டாவதற்கில்லை. சற்குரு முகமாக விதிப்படி பெறப்படுஞ் சமயநூற் கல்வி கேள்விகள் இல்லாதபொழுது, அவ்வறிவும் உதியாது. ஆதலால், கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய இம்மூன்றும்வேண்டும். இவ்விதம் உரைப்பது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிபு. ஆதலினுல் கலாசாலைகளைத் தாபித்துப் பிள்ளைகளுக்குத் தங்கள் தங்கள் சமய நூல்களையும், நீதி நூல்களையும் கருவிநூல்களையும் கற்பித்தல் எல்லாச் சமயத்தாருக்குங் கடனே யாம்.

இக்கருத்துப் பற்றியே, நமது சிறுவர்களுக்கு இப்போது சிற்சில பாடசாலைகளில் சமயபாடங்கள் எற்பட்டு வருதல் யாவரும் அறிந்ததொன்றேயாம். இனி, ஒவ்வொரு பாடசாலையிலும் இச்சமய பாடம் கட்டாய பாடமாக மாறும்வரையில் நாம் சுதேசாபிமானிகள் என்று முன் வருதல் பிறர் நகுதற்கிடமாகும், நிற்க, மேற்குறித்த சைவபோதம் என்

100 152

னும் இப்புத்தகமானது பாடசாலைச் சிறுவர்களுக்கேற்றவாறு மிகச் சுலபமான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. 32-பழைய கதைகளைக் கொண்டதும் ஒவ்வொரு புராணகதையின் மூலமாகவும் நமது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் ஆன்மகோடிகளுக்கு அருள்புரிந்த கைம்மாறற்ற பெருங்கருணையின் தன்மை விளக்கப்பட்டிருக்கின்றதும் நோக்க, மேற்குறித்த வண்ணம், இச்சைவபோதம் என்னும் நூலால் சிறுவர்கள் பெரும்பிரயோசனத்தை அடைவார்களென்பதில் ஐயப்பாடு சிறிதுமில்லை.

இவ்வரிய புத்தகம் யாழ்ப்பாணம் விக்டோரியா கல்லூரி கணித போதகாசிரியராக விளங்கும் ஸ்ரீமான்-சு. சிவபாத சுந்தரம்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டது. இப்பெரியார் இதற்கு அடுத்தவையாக இரண்டு அல்லது மூன்று கதைப் புத்தகங்கள் எழுத வேண்டுமென்பது எமது அபிப்பிராயமாகும்.

புத்தகத்தின் விலை அணா-6. பிரதிகள் சமாஜ ஆபீசிற் கிடைக்கும்.

---

சைவ சித்தாந்தச் சுருக்கம்'

மேற்கூறிய சைவபோதத்தின் தொடர்ச்சியாக ஷை ஆசிரியரால் இந்நூல் ஆக்கப்பட்டது. இதில், சைவ சமய மாட்சி, உயிரின்தன்மை, பதி பசு பாசம், ஆலய தத்துவார்த்தங்கள், மணிமந்திர ஔடதமகிமை, ஆலய வழிபாட்டின் நோக்கம், நித்திய கர்மவிதி முதலிய அரும்பெருஞ் சைவ சித்தாந்தக் கொள்கைகள் சிறுவர்களுக்கேற்றவாறு மிகச் சுருக்கமாகவும் பல உவமானப் பிரமாணங்களுடன் விளக்கமாகவும் காலத்திற்கேற்றவாறு எழுதப்பெற்றிருத்தல் வியக்கற்பாலதேயாம். மாமிச போஜனத்தைப் பற்றி மேலைத்தேச பண்டித சிரோமணிகள் கூறும் அபிப்பிராயங்கள் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தோத்திரப்பாக்களும் திரட்டிச் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வரிய புத்தகம் சிறுவர்களுக்கேயன்றி சித்தாந்தக் கருத்துக்களை அறிய விரும்பும் மற்றெல்லோருக்கும் பயன் தரக் கூடியதாகும்.

இதன் விலை அணா-7. பிரதிகள் சமாஜ ஆபீசிற் கிடைக்கும்.

---

திருவருட்பயன் விளக்கவுரை.

திருவருட் பயன் என்னும் நூலானது மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் எட்டாவதாக விளங்குவது. இஃது சந்தான குரவருள் ஒரு

வரும் தில்லைவாழந்தணருள் ஒருவருமாகிய கொற்றவன்குடி - உமாபதி சிவாசாரியரால் இயற்றப்பட்டது- தமிழ் வேதமாகிய திருக்குறளைப் போல் குறட்பாவால் யாக்கப்பட்டு,

"அறனறிந்தே மான்பு பொருளறிந்தேயின் பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்"

என்றபடி அம்முப்பாலில் இலைமறை காய்போல அரிதுணர வைத்த சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாய வீட்டைப்பற்றிக் கூறும் உண்மை முடிபுகளை சுருக்கமாக 100 குறட்பாவால் விளக்குவதிந்நூல்- இவ்வருமருந்தன்ன சாத்திரத்துக்குப் பழைய உரைகள் இரண்டுண்டு- அவற்றுள் ஒன்று பதவுரை, மற்றையது பொழிப்புரை, பதவுரை எழுதியோர் வேலப்ப பண்டாரம், பொழிப்புரை எழுதியவர் நிரம்ப வழகிய தேசிகர்

திருவள்ளுவப் பயனுக்குப் பரிமேலழகருரை எவ்வாறு சுருங்கியும் பொருளாழங்கொண்டும் விளங்குகின்றதோ அஃதேபோல் இவ்வுரையானது திருவருட் பயனுக்கு அமைந்திருக்கின்றது- இதன் நுண்மாண் பொருள்களை ஆசிரியர் உதவியின்றி மாணவர்கள் ஆராயப்புகுவது கூடாத காரியமாம்- மேலும் இவ்வுரைத் தனிப்பிரதியும் இப்போது கிடைப்பதருமை- இது கருதியே போலும் மேற்கூறிய சிவபாத சுந்தரம் பிள்ளை அவர்கள் இராமானுஜ கவிராயர் அவர்கள் திருக்குறளுக்கு இலகு போதவுரை யொன்று எழுதியதுபோல இவ்விளக்கவுரையை எழுதி உதவியிருக்கின்றார்கள்- இதில் பல அரிய சித்தாந்தக் குறிப்புக்களும், அநேக விசேஷார்த்தங்களும் தற்காலத்துக்கேற்றவாறு நிரம்ப வழகியருரையையும் ஏனைய சாத்திரங்களையும்ஒட்டி எழுதப்பட்டிருக்கின்றன- இவ்விதமே இவர்கள் திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் முதலிய சாத்திரங்களுக்கு விளக்கவுரை எழுதி வெளியிடுவார்களாயின் பேருபகாரமாகும்-

இதன் விலை அணா-10. பிரதிகள் சமாஜ ஆபீசிற் கிடைக்கும்-

---

சே-வெ. ஜம்புலிங்கம்,
தனபாலகர்,
சைவசித்தாந்த மகாசமாஜம்.